ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 13,441 — 1962 දෙසැම්බර් 21 වැනි සිකුරාද — 1962.12.21

13,441 ம் இலக்கம் —1962 ம் ஆண்டு திசெம்பர் மாதம் 21 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி IV—உள்ளூர் ஆட்சி

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| உள்ளூராட்சி அறிவிப்புகள் .. .. | 95 | வரவு செலவுக் கூற்றுக்கள் .. .. | — |
| பதவிகள்-வெற்றிடம் .. .. .. | — | வரவு செலவுத் திட்டங்கள் .. .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் .. | — | ஆதன விற்பனைகள் .. .. .. | — |
| துணை விதிகள் .. .. .. | — | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் .. .. | — |
| உள்ளூராட்சி அதிகாரநிலையத் தேர்தற் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் .. .. .. | — | நானாவிதம் .. .. .. .. | — |


## உள்ளூராட்சி அறிவித்தல்கள்

### களியாட்ட வரிக்கட்டளை சட்டம்

(267 ம் அத்தியாயமான) களியாட்ட வரிக்கட்டளைச் சட்டத்தின் 2 ம் பிரிவின் (1) உட்பிரிவின் கீழ் வவுனியா மாவட்டத்திலுள்ள மேல்பற்று வடக்கு கிராமப் பகுதியின் கிராமச் சங்கத்தால் நிறைவேற்றப்பட்ட கீழ்க்காணும் தீர்மானம், அப்பிரிவின் (2) ம் உட்பிரிவின் நியதிகளுக் கிணங்க உள்ளூராட்சி வீடமைப்பு அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டு பிரசுரிக்கப்படுகிறது.

#### தீர்மானம்

" களியாட்ட வரிக்கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ம் உட்பிரிவின் கீழ் இச்சங்கம் தன் நிருவாக எல்லைக்குள் நடைபெறும் (கட்டளைச் சட்டத்தில் விபரிக்கப்பட்டிருக்கும் விதியான) களியாட்டங்களுக்கான பிரவேசக் கட்டணங்கள்மீது இதன்கீழ் காட்டப்பட்டிருக்கும் வீதங்களின் படியான ஒரு வரியை இத்தீர்மானம் 'கசெற்றில்' பிரசுரிக்கப்படும் தேதியிலிருந்து இத்தால் விதித்துத் திரட்டுகின்றது."

| கட்டணத் தொகை | வரி.வீதம் |
|---|---|
| வரித்தொகை நீங்கலாகப் பிரவேசக் கட்டணம் | ரூ. ச. |
| (அ) 20 சதத்துக்குக் குறையாமலும் 50 சதத்துக்குக் கூடாமலுமிருக்குமிடத்து .. .. | 0 5 |
| (ஆ) 50 சதத்துக்குக் கூடுதலாகவும் ஆனல் ரூபா 1 க்கு கூடாமலுமிருக்குமிடத்து .. .. | 0 10 |
| (இ) ரூபா 1 க்கு கூடுதலாகவும் ஆனல் ரூபா 1.50 க்கு கூடாமலுமிருக்குமிடத்து .. .. | 0 15 |
| (ஈ) ரூபா 1.50 க்கு கூடுதலாகவும் ஆனல் ரூபா 2 க்கு கூடாமலுமிருக்குமிடத்து .. .. | 0 20 |
| (உ) ரூபா 2 க்கு கூடுதலாகவும் ஆனல் ரூபா 3 க்கு கூடாமலுமிருக்குமிடத்து .. .. | 0 30 |
| (ஊ) ரூபா 3 க்கு கூடுதலாகவும் ஆனல் ரூபா 4 க்கு கூடாமலுமிருக்குமிடத்து .. .. | 0 40 |
| (எ) ரூபா 4 க்குக் கூடுதலாகவும் ஆனல் ரூபா 5 க்குக் கூடாமலுமிருக்குமிடத்து .. .. | 0 50 |
| (ஏ) ரூபா 5 க்குக் கூடுதலாகவும் ஆனல் ரூபா 10 க்கு கூடாமலுமிருக்குமிடத்து .. .. | 1 0 |
| (ஐ) ரூபா 10 க்குக் கூடுதலாக இருக்குமிடத்து :— | |
| (1) முதல் ரூபா 10 க்கும் .. .. | 1 0 |
| (2) கூடுதலான ஒவ்வொரு ரூபா 5 க்கும் அல்லது அதன் குதிக்கும் .. .. | 1 0 |

வி. சி. ஜயசூரியா,
நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி வீடமைப்பு அமைச்சு.

கொழும்பு, 1962 ம் ஆ நவம்பர் மீ 30 ந் உ.

12—849.

### முக்கிய விளம்பரம்

*1962 ம் ஆண்டு மார்கழி (டிசெம்பர்) மாதம் 25 ந் திகதி செவ்வாய்க்கிழமை அரசாங்க விடுமுறையாக இருப்பதால், 1962 ம் ஆண்டு மார்கழி (டிசெம்பர்) மாதம் 28 ந் திகதி வெளிவரவிருக்கும் இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட வேண்டிய சகல விளம்பரங்களும் அறிவித்தல்களும் 1962 ம் ஆண்டு மார்கழி (டிசெம்பர்) மாதம் 22 ந் திகதி சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்னர் அரசாங்க அச்சகத்திற்கு வந்துசேர வேண்டுமென இத்தால் தெரிவிக்கப்படுகின்றது.*

*பேர்னட் த சில்வா,*
*அரசாங்க அச்சகத் தலைவர்,*

*அரசாங்க அச்சகம்,*
*கொழும்பு.*
*1962 ம் ஆ மார்கழி (டிசெம்பர்) மீ 14 ந் உ.*

## கிராமச் சங்கங்கள் கட்டளைச் சட்டம்

### 17 ம் பிரிவின்படியான அறிவித்தல்

1961 இன் 60 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தால் திருத்தப்பட்ட படியான கிராமச் சங்கங்கள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 257) 17 (5) ஆம் பிரிவால் எனக்கு உரித்தாக்கப்பட்ட அதிகார பலத்தைக்கொண்டு சிவசுப்பிரமணியம் சின்மயானந்தகுரு மாணிக்கவாசகர் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் வடபிரதேசம் (மேல்), யாழ்ப்பாணம் ஆகிய நான் யாழ்ப்பாண மாவட்டத்து மைலிட்டி கிராமச் சபைக்குத் தலைவர் தெரிவு செய்யும் பொருட்டு 31.12.1962 அன்று முற்பகல் 10.30 மணிக்கு மைலிட்டி கிராமச்சபைக் காரியாலயத்தில் இத்தால் கூட்டுகிறேன்.

சி. சி. மாணிக்கவாசகர்,
உள்ளூராட்சி உதவி ஆணையாளர்,
வடபிரதேசம் (மேல்).

உள்ளூராட்சித் திணைக்களம்,
வட பிரதேசம் (மேல்),
யாழ்ப்பாணம், 1962 ம் ஞு டிசம்பர் மீ 13 வ.

12—820.

*வெள்ளிக்கிழமை தோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.*

*வெளியாவதற்கு நான்கு வேலை நாட்களுக்கு முன் பி. ப. 3.30 மணிக்குள் (சாதாரணமாக திங்கட்கிழமை பி. ப. 3.30 மணி) அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேரவேண்டும்.*

***அரசாங்க வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள்யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், கருமாலயம், கொழும்பு, அவர்கட்கு நேரடியாக சேர்ப்பிக்கப்படவேண்டும். அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக் கொள்ளமாட்டார்.***

இலங்கை, வாழைச்சேனை ஈஸ்ரேண் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனல் உற்பத்திசெய்யப்பட்ட காகிதத்தில்
இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.